Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Imapact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p122–135 TIRJTS-2026-0020
DOI: 10.63300/tmi12n062026.13

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

கன்னியாகுமரி மாவட்ட காணி இன மக்களின் இன்றைய சூழல்களும் எதிர்கால நம்பிக்கையும்

THE PRESENT CHALLENGES AND FUTURE HOPE OF THE KANI TRIBAL PEOPLE OF KANYAKUMARI DISTRICT

தே. ஜாஸ்பின் கில்டா[1,*], முனைவர் ஏ. ராணி[2]

[1] முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் (பதிவெண்: 23213094022003), தமிழ்த்துறை, முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு – 629174 (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்).

[2] நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு – 629174.

***Corresponding author:** தே. ஜாஸ்பின் கில்டா, jaspine14@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 5 October 2026
Revised: 15 October 2026
Accepted: 20 October 2026

Article ID
TIRJTS-2026-0020

Peer review
Double-blind peer review

ABSTRACT

The Kani tribal people living at the foothills of the Western Ghats in Kanyakumari District maintain a close relationship with the mountains, forests, water bodies, and natural resources surrounding them. Although living in harmony with nature brings happiness to their lives, hidden worries and concerns remain deep within their hearts. The Kani people live with dreams and aspirations for their future, yet they are sometimes troubled by the fear that their hopes and ambitions may turn into disappointments.

Although happiness and sorrow continue to revolve alternately in the cycle of life, like the two sides of a coin, the burden of suffering often weighs heavily on their minds. On one hand, they face the fear of wild animals on the other, the lack of proper road connectivity and adequate bus transportation creates difficulties in their daily lives. Despite these challenges, they aspire to pursue education, achieve success, and improve their standard of living. They also face economic hardships that make it necessary to seek better livelihood opportunities and strive for gradual social and economic development.

Thus the present circumstances of the Kani tribal people are filled with challenges while their hopes for the future provide them with the confidence to move forward. This research article examines their present living conditions the difficulties they encounter their educational aspirations their economic circumstances and their hopes for a better future explaining these aspects in relation to their everyday lives

.

© 2026 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS DOI: 10.63300/tmi12n062026.13

How to cite this article: தே. ஜாஸ்பின் கில்டா, & நெறியாளர்: முனைவர் ஏ. ராணி (2026). கன்னியாகுமரி மாவட்ட காணி இன மக்களின் இன்றைய சூழல்களும் எதிர்கால நம்பிக்கையும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 121–131. https://doi.org/10.63300/tmi12n062026.13
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச்சுருக்கம்

கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வாழும் காணி பழங்குடி மக்கள் மேடும் பள்ளமும் நிறைந்த மலை, காடு, நீர்நிலைகள், இயற்கை வளங்களோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளனர். இயற்கைச் செல்வங்களோடு வாழ்வது மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், உள்ளுக்குள் கவலை புதைந்து கிடக்கிறது. எதிர்காலக் கனவுகளைச் சுமந்து வாழும் காணி மக்களின் ஆசை நிராசையாக மாறிவிடுமோ என்ற ஏக்கமும் இன்னொரு பக்கம் இருக்கிறது.

இன்பமும் துன்பமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக வாழ்க்கைச் சக்கரத்தில் மாறி மாறிச் சுழன்றாலும், துன்பத்தைச் சுமக்க மனம் கனத்து விடுகிறது. ஒரு பக்கம் காட்டு யானைகளின் அச்சம்; இன்னொரு பக்கம் சரியான சாலை வழித்தடங்கள் இல்லாமை, பேருந்து வசதியின்மை, வெள்ளத்தால் தரைப்பாலம் துண்டிப்பு. நிலஉரிமைப் பட்டா குறைவாக வழங்கப்படுதல், வன அதிகாரிகளின் இடமாற்ற வற்புறுத்தல், கிராமசபைக் கூட்டங்களில் பங்கேற்க அனுமதி மறுப்பு, கல்வி இடைநிற்றல், வாழ்வாதாரச் சிக்கல், மருத்துவ வசதியின்மை ஆகியவையும் தொடர்கின்றன.

இச்சூழல்களிலும் முடங்கி வாழாமல் கல்வி கற்றுச் சாதனை படைக்க வேண்டும் என்ற உறுதியோடு படிப்படியான முன்னேற்றங்கள் தொடர்கின்றன. ஊராட்சித் தலைமை, ஆய்வு, சட்டம், ஆசிரியப் பணி ஆகிய துறைகளில் காணி இனத்தவர் படைத்துவரும் சாதனைகள் இன்றைய சவால்களுக்கு நடுவிலும் நம்பிக்கையூட்டுகின்றன என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வாழ்வியல் சூழலோடு விவரிக்கிறது.

குறிப்புச் சொற்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை, காணிப் பழங்குடியினர், வன உரிமைச் சட்டம், வன அதிகாரம், ரப்பர் தோட்டத் தொழிலாளி, தரைமட்டப் பாலம், மலை வழித்தடம், பழங்குடியினர் கல்வி

1. ஆய்வு முன்னுரை

மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் வாழும் தொன்மையான வனவாழ் சமூகங்களுள் காணி இனம் ஒன்று. கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, கோதையாறு, குற்றியாறு, மோதிரமலை, குலசேகரம் பகுதிகளில் அவர்கள் சிதறிய மலைக்கிராமங்களில் வாழ்கின்றனர். தலைமுறை தலைமுறையாக உணவு, மருந்து,

வாழ்வாதாரத்திற்குக் காட்டையே நம்பி வாழ்வதுடன், முன்னோர் வாழ்ந்த மேட்டிடத்தில் வாழ்வதையே பெருமையாகக் கருதுகின்றனர்.

அண்மைக்காலங்களில் யானைகளின் அத்துமீறலால் ரப்பர் தோட்டத் தொழிலாளியின் மரணம், வீட்டிற்குள்ளும் நிம்மதியாக வாழ முடியாத அச்சநிலை, காட்டு யானை தாக்கி தொழிலாளி படுகாயமடைந்த அபாயகரமான நிகழ்வு, வெள்ளப் பெருக்கால் தற்காலிகப் பாலம் உடைந்து போக்குவரத்து தடைபட்டது, நீண்ட பேருந்து வழித்தடம் குறுக்கப்பட்டது ஆகியவற்றால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. கரடுமுரடான சாலையில் உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலை, அரசின் நிலஉரிமைப் பட்டா குறைவாக வழங்கப்படுதல், கிராமசபைக் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுமதி மறுப்பு, வன அதிகாரிகள் இருப்பிடத்தை மாற்றிக்கொள்ள வற்புறுத்தல், அரசின் நலத்திட்டங்கள் முறையாகக் கிடைக்காமை ஆகியவை தொடர் பிரச்சனைகளாக உள்ளன.

ஆனால் தொடர்ந்து வரும் இப்பிரச்சனைகளுக்குரிய ஒரே தீர்வு கல்விதான் என்பதை உணர்ந்து, காணி மக்கள் கல்வி கற்றுப் பல துறைகளிலும் சாதனை படைத்து வருகின்றனர். இழந்த இனத்தின் உரிமைகளை உறுதியோடு மீட்டெடுப்போம் என்ற நம்பிக்கை வளர்வதை இவ்வாய்வுக் கட்டுரை வழி காண்போம்.

1.1 ஆய்வின் நோக்கங்கள்

1. கன்னியாகுமரி மாவட்ட காணி மக்களின் இன்றைய வாழ்வியல் சூழலை ஆவணப்படுத்துதல்.
2. யானை–மனித மோதல், போக்குவரத்து, நிலஉரிமை, வன நிர்வாகம், கல்வி, வாழ்வாதாரம், மருத்துவம் ஆகிய சவால்களை அடையாளம் காணுதல்.
3. சமூகத்திற்கு முன்மாதிரியாகத் திகழும் காணி இனத்தவரின் சாதனைகளைப் பதிவு செய்தல்.
4. சமூகத்தை முன்னோக்கிச் செலுத்தும் நம்பிக்கைகளை மதிப்பிட்டு, நலனுக்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

1.2 ஆய்வுமுறை

இவ்வாய்வு பண்சார் (qualitative), விளக்கமுறை மற்றும் பகுப்பாய்வு முறையைப் பின்பற்றுகிறது. காணி மக்கள் மற்றும் சமூகத் தலைவர்களின் கூற்றுகள், *தினத்தந்தி*, *பி.பி.சி. தமிழ்* ஆகியவற்றில் வெளியான பேட்டிகள் முதன்மைச் சான்றுகளாகும். *டைம்ஸ் ஆஃப் இந்தியா*, *நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்*, *இந்து தமிழ் திசை* செய்திகள், காணி மக்கள் பற்றிய ஆய்வுநூல்கள், வன உரிமைச் சட்டம் 2006 ஆகியவை இரண்டாம் நிலைச் சான்றுகளாகும். தரவுகள் கருப்பொருள் வாரியாக வகைப்படுத்தப்பட்டு, மக்களின் அன்றாட வாழ்வோடு தொடர்புபடுத்தி விளக்கப்படுகின்றன.

1.3 ஆய்வுப் பரப்பு

மோதிரமலை, சின்னமோதிரமலை, குற்றியாறு, கல்லாறு, கிழவியாறு, தச்சமலை, முடவன்பொற்றை, களப்பாறை, பின்னமூட்டுத்தேரி, நடனம்பொற்றை, மாங்காமலை, விளாமலை ஆகிய காணி குடியிருப்புகளும், பேச்சிப்பாறை, கோதையாறு, கீரிப்பாறை, குலசேகரம் பகுதிகளும் இவ்வாய்வின் பரப்பாகும்.

2. இன்றைய சூழலில் காணி மக்கள் சந்திக்கும் சவால்கள்: யானை–மனித மோதல்

அண்மைக்காலங்களில் குமரியின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் காணி மக்களிடையே அச்சம் நிலவி வருகிறது. யானைகளின் தொல்லையால் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு மரணங்களும் நிகழ்கின்றன. பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் அடிக்கடி நிகழும் காணி குடியிருப்புகளில் தங்களுக்குரிய பாதுகாப்பு இல்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். "மேட்டிடத்தில் வாழ்வதே காணி இனத்தவர்க்குப் பெருமை; மலையிலும் காட்டிலும் எங்கள் மூதாதையர் வாழ்ந்து சிறந்ததால் இவ்விடம் எங்களுக்குரியது" என உறுதியான மனதோடு வாழும் இம்மக்களின் வாழ்விலும் சில சவால்கள் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன.

2.1 விளைநிலங்களைச் சேதப்படுத்திய காட்டுயானைகள்

குமரி மாவட்டத்தில் மலையோர மற்றும் வனப்பகுதியை ஒட்டிய கிராமங்களில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. காணிப் பழங்குடியினர் வசிக்கும் இடங்களில் புகுந்து வீடுகளைச் சேதப்படுத்தியதோடு, நியாயவிலைக் கடைகளிலும் புகுந்து அரிசியைத் தின்று நாசம் செய்துள்ளன. குடியிருப்புப் பகுதியைச் சுற்றியுள்ள விளைநிலத்தில் நல்லமிளகு, ரப்பர் போன்ற மரங்களை நட்டு, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தால் குடும்பத்தை நடத்திவிடலாம் என்று கனவு கண்டவர்களுக்குக் காத்திருந்தது அதிர்ச்சிப் பேரலை. கூட்டமாக வரும் யானைகள் மரங்களை வேரோடு சாய்த்தும் விளைநிலங்களைச் சேதப்படுத்தியும் வருவதால் ஏராளமான இழப்புகளைக் காணி மக்கள் தினந்தோறும் அனுபவித்து வருகின்றனர்.

2.2 இரும்புக் கதவை உடைத்து குடியிருப்புக்குள் நுழைந்த யானைகள்

மலைப்பகுதிகளில் மேடும் பள்ளமுமாகப் பாதை இருப்பதால் யானைகளின் நடமாட்டத்தை வனத்துறையினரால் சரியாகக் கணிக்க முடியவில்லை. தொடர்ந்து குடியிருப்புப் பகுதிக்குள் யானை வருவதற்கான காரணம் என்ன, எப்படி வந்தது என்பது பற்றி விசாரணை மேற்கொண்டபோது, தனியாருக்குச் சொந்தமான பெரிய ரப்பர் தோட்டத்தில் உலாவிய யானைகள் அந்தத் தோட்டத்தின் இரும்புக் கதவை உடைத்துத் தூக்கி வீசிவிட்டு குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்தது தெரியவந்தது. யானைகள் ஆங்காங்கே பள்ளம் மற்றும் நீர்நிலைப் பகுதிகளில் சுற்றித் திரிவதால் அவற்றை அடர்ந்த வனப்பகுதிக்குள் துரத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. மேலும்

மக்களைத் தாக்கும் கொடிய “புல்லட்ராஜா” என்ற யானையும் இந்தக் கூட்டத்தில் உள்ளதாகக் கூறப்படுவதால் பொதுமக்கள் மிகுந்த பீதியடைந்துள்ளனர்.

2.3 மளிகைக்கடையை உடைத்து அரிசியைத் தின்ற யானை

மேல் கோதையாறு பகுதியில் வனத்துறையினர் கொண்டுவந்து விட்ட அரிக்கொம்பன் யானைக்கு அரிசி மிகவும் பிடிக்கும். மோதிரமலையிலிருந்து குற்றியாறு பகுதிக்கு இடைப்பட்ட இடத்தில் மளிகைக்கடை நடத்தி வந்த மாற்றுத்திறனாளி வீரம்மாவும் அவரது கணவர் பாலசந்திரனும் கடையைப் பூட்டிவிட்டு பக்கத்திலுள்ள அறையில் தூங்கிக்கொண்டிருந்தபோது, அந்த யானை முன்பக்கக் கதவை உடைத்து, தனக்குப் பிடித்த அரிசி சாக்கு மூட்டையைத் துதிக்கையால் எடுத்துத் தின்றது. சத்தம் கேட்டு விழித்தெழுந்த இருவரும் பின்பக்கக் கதவைத் திறந்து கூச்சலிட்டு ஓடினர். கூச்சல் கேட்டு வந்த முதியவர் மணி (60) யானையை விரட்ட முயன்றார்; அது அவரைத் துரத்தியது, அவர் விரைவாக ஓடித் தப்பித்தார். ஊர் மக்கள் தீப்பந்தம் ஏந்தி விரட்டியும் அசராமல் போக்குக் காட்டிய யானை, பலமணி நேரம் கழித்து மெதுவாகக் காட்டை நோக்கிச் சென்றது. யானைகள் மீண்டும் வராதவாறு காட்டுக்குள்ளேயே கட்டுப்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2.4 தோட்டத் தொழிலாளியைத் தந்தத்தால் குத்திய காட்டு யானை

குமரி மாவட்டம் அதிக வனம் நிறைந்த பகுதியாகும். மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி குலசேகரம், கீரிப்பாறை உள்ளிட்ட பகுதிகள் உள்ளதால், வனத்தில் உலாவும் காட்டுயானைகள் அருகிலுள்ள குடியிருப்புகளுக்குள் புகுந்து மக்களை அச்சுறுத்துவதும், விளைநிலங்களுக்குள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்துவதும் தொடர்ச்சியாக நிகழ்கிறது.

14 ஜூன் 2026 அன்று, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ரவி, கீரிப்பாறை மாறமலை பகுதியில் உள்ள தனியார் தோட்டத்தில் களை எடுக்கும் வேலை பார்த்து வந்தார். அன்று காலை 6 மணிக்கு வழக்கம்போல அறையிலிருந்து வெளியே வந்தபோது, அவ்வழியே வந்த ஒரு ஆண் காட்டுயானை திடீரெனத் தந்தத்தால் அவரது வயிற்றுப்பகுதியில் குத்தித் தூக்கி வீசிவிட்டுச் சென்றது. குடல் வெளியேறிய நிலையில் படுகாயமடைந்த அவரை, தோட்டக் கண்காணிப்பாளர் கண்ணன் மீட்டு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்; அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. குமரியின் மலையோர கிராமங்களில் யானைகளின் அட்டகாசம் தொடர்வதால் மக்கள் எந்நேரமும் அச்சத்தோடு வாழ்கின்றனர்.

2.5 யானை தாக்கி அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளி சாவு

23.06.2024 அன்று கோதையாறு கோட்டம் குற்றியாறு பிரிவு-2இல் பால்வெட்டும் தொழிலாளியாகப் பணியாற்றிவந்த கோதையாறு பகுதியைச் சேர்ந்த மணிகண்டன்

(58) பால் வெட்டத் தயாராகிக்கொண்டிருந்தபோது, ஒரு காட்டுயானை அவர் பக்கம் வருவதைக் கண்ட சக தொழிலாளி கூச்சலிட்டார். மணிகண்டன் தப்பிக்க ஓடினார்; ஆனால் யானை அவரைப் பின்தொடர்ந்து துரத்தியது. சுமார் 100 மீட்டர் ஓடிய நிலையில் சோர்வடைந்து ஒரு ரப்பர் மரத்தின் பின்னால் மறைந்து நின்றார். துரத்திவந்த யானை கண்ணிமைக்கும் நேரத்தில் துதிக்கையால் அவரைப் பிடித்துத் தூக்கி ரப்பர் மரத்தில் அடித்து வீசியது. பலத்த காயமடைந்த மணிகண்டன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அரசு ரப்பர் கழகத் தோட்டங்களில் இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதாக ரப்பர் கழகத் தொழிலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தேதி	இடம்	நிகழ்வு	விளைவு
14.06.2026	கீரிப்பாறை–மாறமலை, தனியார் தோட்டம்	தொழிலாளி ரவியை யானை தந்தத்தால் குத்தியது	படுகாயம்; ஆசாரிப்பள்ளம் மருத்துவமனையில் சிகிச்சை
23.06.2024	குற்றியாறு பிரிவு-2, கோதையாறு கோட்டம்	பால்வெட்டும் தொழிலாளி மணிகண்டனை யானை துரத்தித் தாக்கியது	சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு
—	மோதிரமலை–குற்றியாறு இடையே	அரிக்கொம்பன் மளிகைக்கடையை உடைத்து அரிசியைத் தின்றது	உயிர்ச்சேதமில்லை; பலமணி நேரம் கழித்து காட்டுக்குள் சென்றது
—	குடியிருப்பை ஒட்டிய தனியார் ரப்பர் தோட்டம்	யானைக்கூட்டம் இரும்புக் கதவை உடைத்து நுழைந்தது	வீடுகள், பயிர்கள் சேதம்

3. சாலை, போக்குவரத்து மற்றும் வெள்ளப் பெருக்கு சேதம்

பேச்சிப்பாறை அருகே மோதிரமலையிலிருந்து குற்றியாறுக்குச் செல்லும் சேதமடைந்த சாலையைச் சீரமைக்க நிதி ஒதுக்கியும் பயனில்லாமல் இருக்கிறது. இதற்கு வனத்துறையினர் முட்டுக்கட்டை போடுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் காணி மக்கள் மரண பயத்துடன் பயணிக்கும் அவலநிலை நீடிக்கிறது.

3.1 சீரமைக்கப்படாத சாலை

மோதிரமலை–குற்றியாறு சாலை 2.5 கி.மீ நீளம் கொண்டது. காணிப் பழங்குடி மக்களின் போக்குவரத்திற்காகவும், ரப்பர் கழகத் தொழிலாளர் குடியிருப்புகளுக்குச் செல்லும் வகையிலும் இந்தப் பாதை அமைக்கப்பட்டது. மாங்காமலை, விளாமலை, முடவன்பொற்றை, களப்பாறை, பின்னமூட்டுத்தேரி, நடனம்பொற்றை, தச்சமலை, குற்றியாறு, மயிலாறு, கிளவியாறு, கல்லாறு ஆகிய இடங்களில் வாழும் காணி

மக்களும், ரப்பர் கழகத் தொழிலாளர்களும், கோதையாறு மின்நிலைய ஊழியர்களும் இச்சாலையைப் பயன்படுத்துகின்றனர். அரசுப் பேருந்துகளும் ரப்பர் கழகத்தின் கனரக லாரிகளும் இவ்வழியாகச் செல்கின்றன.

இச்சாலை கடைசியாக 2010–11ஆம் ஆண்டு பேச்சிப்பாறை ஊராட்சி மூலம் சீரமைக்கப்பட்டது. அதன்பிறகு சீரமைக்கப்படாததால் பள்ளங்கள் நிறைந்த, கரடுமுரடான, போக்குவரத்துக்குச் சாதகமற்ற சாலையாக மாறிவிட்டது. சாலையின் இருபுறமும் ரப்பர் மரங்களும் ஊடுபயிராக அன்னாசியும் நடப்பட்டுள்ளன. அன்னாசி குத்தகைதாரர்கள் சாலையின் இருபுறமும் சூரிய மின்வேலி அமைத்துள்ளனர்.

3.2 வனத்துறை முட்டுக்கட்டை

2025ஆம் ஆண்டின் இறுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலமாகத் தார்ச்சாலையாகச் சீரமைக்க ரூ.1.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தமும் விடப்பட்டது; ஆனால் பணி நடந்தபாடில்லை. இதற்கு வனத்துறையினர் முட்டுக்கட்டை போடுவதாகக் காணி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். யானை நடமாட்டம் உள்ள இந்தச் சாலை வழியாக நடந்து சென்றாலோ, இரவில் இருசக்கர வாகனத்தில் சென்றாலோ மரண பயத்துடன்தான் செல்ல வேண்டியுள்ளது என்று காணி மக்கள் தங்கள் வேதனையை வெளிப்படுத்துகின்றனர்.

3.3 அனுமதி மறுப்பு

பேச்சிப்பாறை ஊராட்சியின் முன்னாள் தலைவர் ராஜன் காணி *தினத்தந்தி* நாளிதழுக்கு அளித்த பேட்டியில், பல ஆண்டுகளாகச் சேதமடைந்து கிடக்கும் மோதிரமலை–குற்றியாறு சாலையின் இருபுறமும் மின்வேலி அமைக்கப்பட்டுள்ளதால், யானை போன்ற வனவிலங்குகள் வந்தால் மக்கள் ஓடித் தப்பிக்க முடியாத நிலை உள்ளது என்றார். சாலைப் பணிக்கான பொருட்களை எடுத்துச் செல்ல ஒப்பந்ததாரர் வனத்துறையிடம் அனுமதி கோரியபோது வனத்துறை மறுத்துவிட்டது. சாலையை விரிவாக்கம் செய்ய மாவட்ட வன அலுவலருக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் உள்ளது; வன உரிமைச் சட்டமும் வனப்பகுதிகளில் சாலை அமைக்கும் உரிமையை வழங்கியுள்ளது. எனவே வனத்துறையினர் முட்டுக்கட்டை போடாமல் சாலையைச் சீரமைக்க அனுமதி வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

3.4 வெள்ளப் பெருக்கால் துண்டிக்கப்படும் மலைக்கிராமங்கள்

தொடர் மழைக்காலத்தில் வெள்ளப் பெருக்கு அதிகரிக்கும்போது மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் மழை தீரும்வரை காத்திருக்க வேண்டியுள்ளது. தரைமட்டப் பாலம் துண்டிக்கப்படுவதால் போக்குவரத்து தடைபடுகிறது, வேலைவாய்ப்பு இழக்கப்படுகிறது, விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுகிறது.

22 ஆகஸ்ட் 2025 அன்று, மோதிரமலை ஆற்றின் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி நடைபெற்றுவந்த நிலையில், குழாய்கள் மூலம் அமைக்கப்பட்ட தற்காலிகத் தரைப்பாலம் மழைவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இதனால் குற்றியாறு, கல்லாறு, கிழவியாறு மற்றும் சின்னமோதிரமலை, முடவன்பொற்றை, தச்சமலை, களப்பாறை, பின்னமூட்டுத்தேரி, நடனம்பொற்றை போன்ற பழங்குடிக் குடியிருப்புகள் உள்ளிட்ட 10 மலைக்கிராமங்களுக்குப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. இருசக்கர வாகனங்களில் சென்றவர்கள் ஆற்றைக் கடக்க முடியாமல் பலமணி நேரம் காத்திருந்து, சீரமைத்த பின்னரே கடந்து சென்றனர். கிழவியாறுக்குச் சென்ற தடம் எண் 89எம் பேருந்து, திரும்ப வரும்போது தண்ணீர்ப் பெருக்கால் வரமுடியாமல், சீர்செய்த பிறகே அதிகாரிகளின் முயற்சியால் கொண்டுவரப்பட்டது.

3.5 55 ஆண்டுகளாக இயங்கிய அரசுப் பேருந்து வழித்தடம் குறுக்கம்

குமரி மாவட்டத்தின் மிக நீண்ட தொலைவு கொண்ட பேருந்துத் தடம் கன்னியாகுமரி–கோதையாறு தடமாகும். கடலையும் மலையையும் இணைக்கும் இந்தத் தடத்தில், தடம் எண் 13, கன்னியாகுமரி–கோதையாறு லோயர் கேம்ப் என இரண்டு பேருந்துகள் இயக்கப்பட்டன. தற்போது வழித்தடம் சுருக்கப்பட்டு நாகர்கோவில்–கோதையாறு என மாற்றப்பட்டுள்ளது. 55 ஆண்டுகளாக இயங்கிய பேருந்து குறுக்கப்பட்டதால் காணிப் பழங்குடிகள், ஏனைய பழங்குடி மக்கள், கோதையாறு மின்நிலைய ஊழியர்கள், ரப்பர் கழகத் தொழிலாளர்கள், பள்ளி–கல்லூரி மாணவர்கள் என பலதரப்பு மக்களும் கடும் அவதிக்குள்ளாகின்றனர். “பாதையும் சரியில்லை, சாலையும் சரியில்லை, பேருந்தும் சரிவர இயக்கப்படவில்லை” என்று மக்கள் போராடி வருகின்றனர்.

4. நிலஉரிமை தொடர்பான சவால்கள்

காணி மக்களின் முன்னோர்களுக்கு மன்னர் மார்த்தாண்டவர்மா காலத்தில் வழங்கப்பட்ட நிலத்தைப் பயன்படுத்த வனத்துறை அதிகாரிகளும் அரசு அதிகாரிகளும் தடை விதித்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 சென்ட் நிலத்தை மட்டுமே அளவீடு செய்து வழங்கியுள்ளனர். நில அளவையின்போது அதிகாரிகளுக்கு இடையூறு செய்யாமல் இருந்ததால் அந்நிலம் பட்டா நிலமாகத் தங்களுக்குக் கிடைத்ததாகக் குற்றியாறு காணி மக்கள் கூறுகின்றனர்.

ஆனால் மோதிரமலைப் பகுதியில் வாழும் மக்கள் நில அளவீட்டாளரிடம் இடையூறு செய்து அளக்க விடாததால், முன்னோர் சேர்த்து வைத்த நிலம்கூடத் தங்களுக்குரியதாக இல்லை; ஒரு சென்ட் நிலம்கூடப் பட்டா நிலமாக இல்லை என்ற வருத்தத்தை *பி.பி.சி. தமிழ்* செய்தியாளரிடம் எடுத்துரைத்தனர். மூதாதையர் உரிமையைவிட, நிர்வாகத்துடன் ஒத்துழைப்பதே நிலப் பாதுகாப்பைத் தீர்மானிக்கும்

நிலை உருவாகியுள்ளதை இவ்வேறுபாடு காட்டுகிறது; வன உரிமைச் சட்டம் 2006 அங்கீகரிக்க வேண்டியது இந்த மூதாதையர் உரிமையைத்தான்.

5. வனத்துறை மற்றும் நிர்வாகத்துறை சவால்கள்

காட்டில் கிடைக்கும் அரியவகைப் பொருட்களையே நம்பி வாழும் காணி மக்களை, வனத்துறையினர் அவ்வப்போது வந்து வேறு குடியிருப்புக்கு மாறிச் செல்லுமாறு எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். அண்மைக்காலங்களில் யானைத் தாக்குதல்களால் நிகழ்ந்துவரும் தொடர் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கையும் இல்லை. குறைகளைக் கிராமசபைக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லலாம் என்றால், அக்கூட்டங்களில் கலந்துகொள்ளவே அனுமதி மறுக்கப்படுகிறது.

“சிறிய மலைக்கிராமங்களில் உரிமைகள் பறிக்கப்படுவதை எண்ணிக் கவலையோடும் ஏக்கத்தோடும் வாழ்ந்து வரும் எங்களுக்குரிய இவ்விடமும் பறிபோய்விடுமோ என்ற அச்சத்தோடு வாழ்கிறோம்” என்கிறார் மோதிரமலை ஞானசெல்வி. அரசின் நலத்திட்டங்களும் முறையாக இவர்களைச் சென்றடைவதில்லை.

6. கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரச் சவால்கள்

தொடக்கக்கல்வி, நடுநிலைக்கல்விவரை உள்ளூரிலேயே படிக்கும் குழந்தைகள் உற்சாகத்தோடு பள்ளிக்கூடம் சென்று வருகின்றனர். மேல்நிலை மற்றும் மேற்படிப்பிற்காகப் பேச்சிப்பாறை, குலசேகரம், மார்த்தாண்டம் போன்ற இடங்களுக்குப் பேருந்தில் பயணம் செய்யவேண்டியிருப்பதால், மனமில்லாமல் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தும் நிலை காணி மக்களிடம் தொடர்கிறது. பேருந்து வசதி சரிவர இயங்குவதில்லை; இடையில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டால் வனவிலங்குகளால் பாதுகாப்பற்ற சூழல் ஏற்படுகிறது.

இவற்றைத் தாண்டி மேற்கல்விக்காக வெளியூர்களுக்குச் சென்று படிப்போரும் உண்டு. “படித்தால் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்குமா? பொருளாதார நிலை மேம்படுமா?” என்ற கேள்விகள் அவர்களிடையே எழுகின்றன. பெண் பிள்ளைகளைப் படித்து முடித்தவுடன் திருமணம் செய்து கொடுக்கின்றனர். ஆண் பிள்ளைகளோ, விவசாயம் செய்து விலங்குகளுக்கு இரையாகிப் பயனற்றுப் போவதைவிட கேரளா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களுக்குச் சென்று கூலி வேலை செய்கின்றனர். உள்ளூரில் கிடைக்கும் அரியவகைப் பொருட்களை விற்பனை செய்யக் குலசேகரம் சந்தை, மார்த்தாண்டம்வரை செல்ல வேண்டியுள்ளது; உரிய வருமானமும் கிடைப்பதில்லை என்று கவலையோடு தங்கள் நிலைமையை எடுத்துரைக்கின்றனர்.

7. மருத்துவம் மற்றும் சுகாதாரச் சவால்கள்

மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி வாகனம் செல்ல முடியாத சூழலில், நோயாளிகளை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல இரண்டு கம்புகளில் துணியைக் கட்டி நான்கு பேராக நடந்தே தூக்கி வரவேண்டிய நிலை உள்ளது. நினைத்த நேரத்தில் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல முடியாமல் உயிரிழப்புகளும் நிகழ்ந்துள்ளன. கரடுமுரடான பாதையும், அருகில் மருத்துவ வசதி இல்லாத நிலையும் மருத்துவம் பெறுவதைச் சவாலாக்குகின்றன.

காணி மக்கள் மரபுவழி மருத்துவ அறிவின் காவலர்களாகவும் திகழ்கின்றனர். *ஆரோக்கியப்பச்சை* போன்ற மருத்துவச் செடிக்கு உயிர் கொடுக்கும் மகத்துவச் சக்தி உண்டு என்பதை அறிந்திருந்தும், அந்த அறிவுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற வருத்தமும் அவர்களிடம் உள்ளது.

8. காணி இன மக்களின் எதிர்கால நம்பிக்கை

‘காணி என்றோர் இனமுண்டு தனியோர் அவர்க்கு குணமுண்டு’

என்ற கொள்கைத் துடிப்போடு கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி, ஆசிரியர், ஊராட்சித் தலைவர் எனச் சிறந்த பதவிகளை வகித்து, காணி மக்களின் வாழ்க்கைக்கு முன்மாதிரியாகத் திகழும் சாதனை நட்சத்திரங்களைக் காண்போம்.

8.1 விருதுகள் குவித்த ராஜன் காணி

1996ஆம் ஆண்டு பேச்சிப்பாறை ஊராட்சித் தலைவர் பதவி பழங்குடி இனத்தவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டபோது ராஜன் காணி வெற்றி பெற்றார். அதன்பிறகு அப்பதவி பொதுப் பிரிவுக்கு மாறிய பிறகும், அவர் 4வது முறையாக வெற்றி பெற்றுள்ளார். சிறந்த ஊராட்சித் தலைவருக்கான விருதை அப்துல் கலாமிடமும், சிறந்த ஊராட்சி நிர்வாகத்துக்கான விருதை முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிடமும் பெற்றுள்ளார். தமிழக அரசின் சிறந்த ஊராட்சித் தலைவர் விருது, தங்கப்பதக்கம் என விருதுகளைக் குவித்துள்ளார்.

8.2 கல்வியில் முன்னேற்றம்

காணி இனக் குழந்தைகள் தற்போது கல்வியின்மீது அதிக ஆர்வம் செலுத்துகின்றனர்.

பள்ளி நிலை	இடங்கள்
அரசு தொடக்கப்பள்ளிகள்	தச்சமலை, தோட்டமலை, மோதிரமலை
அரசு நடுநிலைப் பள்ளிகள்	ஆலம்பாறை, வட்டப்பாறை
அரசு உயர்நிலைப் பள்ளிகள்	கோதையாறு, வாழையத்துவயல்
அரசு பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளிகள்	பேச்சிப்பாறை, பத்துகாணி

காணி குடியிருப்புகளில் வசிக்கும் மாணவ–மாணவிகள் பொறியியல், மருத்துவம், சட்டம், கலை அறிவியல் போன்ற உயர்கல்விக்காகத் தினமும் படகு மூலம் பயணம் செய்து கல்லூரிக்குச் செல்கின்றனர். கல்வி மற்றும் பிற தேவைகளுக்காகக் காணி மக்கள் சமவெளிப் பகுதிக்கு வருவதால் அவர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. சமவெளிப் பகுதிகளிலிருந்து அவர்கள்மீதான தாக்கங்களும் அழுத்தங்களும் அதிகரித்தபோதிலும், காணி மக்கள் தங்கள் கலாச்சாரத்தையும் பாரம்பரியப் பண்பாட்டையும் விடாப்பிடியாகக் கட்டிக்காத்து வருகின்றனர்.

8.3 முனைவர் பட்டம் பெற்ற முதல் காணி (குமரி மாவட்டம்)

கன்னியாகுமரி மாவட்டக் காணி மக்களிடையே முதன்முதலில் முனைவர் பட்டம் பெற்றவராக சுரேஷ் சாமியார்காணி அறியப்படுகிறார். இவர் சித்த இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்று, சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளார். இவரது மூத்த மகள் இவாஞ்சலின் ரேஷ்மா மருத்துவப் படிப்பும், இளைய மகள் நிஷ்மா சட்டப் படிப்பும் பயின்றுள்ளனர்.

8.4 சட்டத்துறையில் சாதனை: எஸ். இவாஞ்சலின் நிஷ்மா

தாடிக்காரன்கோணம் அருகிலுள்ள கூவைக்காடு காணி குடியிருப்பைச் சேர்ந்த எஸ். இவாஞ்சலின் நிஷ்மா, மதுரை அரசு சட்டக் கல்லூரியில் சட்டக் கல்வி பயின்று பட்டம் பெற்றார். தன் சமூகத்தில் சட்டப்படிப்பு முடித்த முதல் நபராக இவர் குறிப்பிடப்படுகிறார். தற்போது சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றும் நிஷ்மாவின் சாதனை, காணி இளைஞர்களுக்கும் குறிப்பாகப் பெண்களுக்கும் உயர்கல்வி மற்றும் சட்டத்துறையில் முன்னேறுவதற்கான நம்பிக்கையை அளிக்கிறது. பழங்குடி மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் சட்ட அறிவு முக்கியப் பங்கு வகிக்க முடியும் என்பதற்கு இவரது பயணம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

8.5 ஷீலா: பழங்குடியினத் தலைமை ஆசிரியை

கன்னியாகுமரி மாவட்டம், களியல் அருகே உள்ள பேணு பகுதியைச் சேர்ந்த ஷீலா, பத்துகாணி அரசு உண்டு உறைவிடப் பள்ளியில் படித்தவர். ஆசிரியர் பயிற்சி முடித்து வட்டப்பாறை தொடக்கப்பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றினார். பின்னர், தான் படித்த பத்துகாணி அரசு உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியிலேயே தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியையாகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறார்.

9. விவாதம்

இவ்வாய்வில் காணப்பட்ட சவால்கள் தனித்தனியானவை அல்ல; ஒன்றோடொன்று பிணைந்த சங்கிலித் தொடர். யானைத் தாக்குதல் விவசாயத்தை பயனற்றதாக்கி, இளைஞர்களைக் கூலி வேலைக்காக அண்டை மாநிலங்களுக்குத் தள்ளுகிறது.

மோசமான சாலைகளும் ஒழுங்கற்ற பேருந்துகளும் மாணவர்களை நடுநிலைக்கல்விக்குப் பிறகு படிப்பை நிறுத்தச் செய்கின்றன; நோயாளிகளையும் விளைபொருட்களையும் தாமதப்படுத்துகின்றன. நிலஉரிமையின்மை, இடமாற்ற வற்புறுத்தல், கிராமசபையிலிருந்து விலக்கல் ஆகியவை தீர்வு கோரும் குரலையே சமூகத்திடமிருந்து பறிக்கின்றன.

சாலை விவகாரம் இதற்குத் தெளிவான சான்று. நிதி ஒதுக்கீடும் ஒப்பந்தமும் இருந்தும், வன உரிமைச் சட்டம் 2006 வனப்பகுதிகளில் இத்தகைய வசதிகளுக்கு வழிவகை செய்திருந்தும், வனத்துறை அனுமதியின்மையால் பணி நின்றுவிட்டது. குறைபாடு வளங்களில் அல்ல; துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பிலும் சமூகத்தின் உரிமைகளை அங்கீகரிப்பதிலுமே உள்ளது. இதற்கு மாறாக, பகுதி 8இல் காணப்பட்ட சாதனையாளர்கள், கல்வியும் உள்ளாட்சித் தலைமையுமே காணி மக்களுக்குக் குரல் தரும் வழிகள் என்பதைக் காட்டுகின்றனர்.

10. பரிந்துரைகள்

1. **யானைப் பாதுகாப்பு:** குடியிருப்புகளைச் சுற்றி அகழி, வேலி அமைத்தல்; முன்னெச்சரிக்கை முறைமை; பயிர், உடைமை, உயிர்ச்சேதத்திற்கு உடனடி இழப்பீடு.
2. **சாலை, பாலம்:** மோதிரமலை–குற்றியாறு சாலைக்கு வனத்துறை அனுமதி வழங்கி பணியை முடித்தல்; மோதிரமலை உயர்மட்டப் பாலத்தை விரைவில் கட்டிமுடித்தல்.
3. **பேருந்து வசதி:** கன்னியாகுமரி–கோதையாறு முழு வழித்தடத்தை மீண்டும் இயக்குதல்; மாணவர், தொழிலாளர்களுக்குக் குறையாத நேர அட்டவணை.
4. **நிலஉரிமை:** வன உரிமைச் சட்டம் 2006இன் கீழ் மோதிரமலை உள்ளிட்ட குடியிருப்புகளுக்கு அளவீடு செய்து பட்டா வழங்குதல்.
5. **பங்கேற்பு:** கிராமசபைக் கூட்டங்களில் காணி மக்கள் கலந்துகொண்டு பேச உறுதி செய்தல்.
6. **கல்வி:** இடைநிற்றலைக் குறைக்க விடுதி, பயண உதவி, தொழில் வழிகாட்டல் வழங்குதல்.
7. **மருத்துவம்:** மலைக்கிராமங்களுக்கு நடமாடும் மருத்துவக் குழுக்கள், ஆம்புலன்ஸ் வசதி.
8. **வாழ்வாதாரம்:** வனப் பொருட்களுக்கு நியாயவிலைக் கொள்முதல்; ஆரோக்கியப்பச்சை போன்ற மரபு மருத்துவ அறிவுக்கு அங்கீகாரமும் பாதுகாப்பும்.

11. ஆய்வு நிறைவுரை

சவால்களும் சிக்கல்களும் நிறைந்ததுதான் மனித வாழ்வு. சிக்கல்களுக்கு உரிமைக் குரல் எழுப்பித் தீர்வு காண்போம்; சவால்களைச் சாமர்த்தியமாக எதிர்கொள்வோம். தீர்க்க முடியாத பிரச்சனைகளும் இல்லை; எதிர்கொள்ள முடியாத சவால்களும் இல்லை. இயற்கையைத் தெய்வமாக எண்ணி வாழ்ந்த சுகுவாமிஷ் பழங்குடியினரின் உரிமைக்காகக் குரல் கொடுத்த தலைவர் சியாட்டிலை நினைவுகூருவோம். அதே உணர்வோடு, குமரி மாவட்டக் காணி மக்கள் இன்றும் சந்தித்துவரும் ஏராளமான சவால்களை இவ்வாய்வு பட்டியலிட்டுக் காட்டியுள்ளது.

இனிவரும் காலங்களில் உரிமையைக் காக்கச் சட்டத்துறையிலும் சாதனை படைத்து, தன் இனத்தின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க உறுதிகொண்டுள்ளார் நிஷ்மா. ஆசிரியை வீலா, சுரேஷ் சாமியார்காணி, ராஜன் காணி, இவாஞ்சலின் ரேஷ்மா ஆகியோரின் சாதனை காணி இனத்திற்கே கிடைத்த மாபெரும் வெற்றி. ஓர் இனம் அழியாமல் காக்கக் காவலர்கள் இருக்கிறார்கள். எதிர்காலத்தில் காணி இன மக்கள் இன்னும் இமாலயச் சாதனை படைப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

துணைநூற்பட்டியல்

1. Nalini, B. (2001). *Kani Tribes of Kotayar Forest: A Study on Their Health Culture and Eco-System*. Aravali Books International.
2. Shanmuga Easwari, V. (2024). Traditional knowledge system of Kaani tribes in Kanyakumari District. *Indian Journal of Anthropological Research*.
3. Sushma Jenifer, S. (2025). *Historizing the Ancestral Kani Tribal Roots*. Zenodo.
4. *The Scheduled Tribes and Other Traditional Forest Dwellers (Recognition of Forest Rights) Act, 2006*.
5. *தினத்தந்தி* – பேச்சிப்பாறை முன்னாள் ஊராட்சித் தலைவர் ராஜன் காணியின் பேட்டி.
6. *பி.பி.சி. தமிழ்* – குற்றியாறு, மோதிரமலை காணி மக்களின் நிலஉரிமை குறித்த செய்தி.
7. *இந்து தமிழ் திசை* (hindutamil.in) – காணி மக்களின் கல்வி மற்றும் வாழ்க்கைச் சூழல் குறித்த செய்தி.
8. *The Times of India* (indiatimes.com).
9. *The New Indian Express* (newindianexpress.com).
10. பழங்குடி முரசு (pazhangudimurasu.wordpress.com).
11. TNAU Agritech Portal: NGO & SHG (agritech.tnau.ac.in).

References

Kani Tribes of Kotayar Forest: A Study on Their Health Culture and Eco-System B. Nalini, Aravali Books International - 2001.

Traditional Knowledge System Of Kaani Tribes In Kanyakumari District

V. Shanmuga Easwari, Indian Journal of Anthropological Research - 2024.

Historizing the Ancestral Kani Tribal Roots. S. Sushma Jenifer. Zenodo - 2025.

The Scheduled Tribes and Other Traditional Forest Dwellers (Recognition of Forest Rights Act 2006).

Times of India. India times.Com

Pazhangudimurasu.Wordpress.Com

New Indian express.Com

Agritech.Tnau.Ac.In TNAU Agritech Portal :: NGO & SHG

jp ,e;J jkpo; - fhzp kf;fspd; fy;tp kw;Wk; tho;f;ifr; #oy; Fwpj;j nra;jp - hindutamil.in